# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,564—1963 මාර්තු 15 වැනි සිකුරාදා—1963.3.15**

13,564 ம் இலக்கம்—1963 ம் ஆண்டு மாச்சு மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நாளுவித அறிவித்தல்கள் .. | 178 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 177 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |

## அரசாங்க அறிவித்தல்கள்

### பட்டினி விடுதலை இயக்கத்தை நினைவு கூருவதற்காக விசேட முத்திரை வெளியீடு

பட்டினி விடுதலை இயக்கத்தை நினைவு கூருவதற்காக 1963 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21 ம் திகதியன்று 5 சதம் 25 சதம் பெறுமதியான முத்திரைகள் விசேட வெளியீடாக வெளியிடப்படுமென்று இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இந்த முத்திரைகள் 1963 ம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ம் திகதி வரை அல்லது கையிருப்பு முடியும் வரை இவற்றில் எது முந்தியதோ அந்தத்தினம் வரை விற்பனையிலிருக்கும். இம் முத்திரைகள் விற்பனையில் இருக்கும் காலத்தில் தற்போது இதே விலையிலுள்ள முத்திரைத் தொடர்களின் விற்பனை நிறுத்தப்படும்.

2. இவ்விரு முத்திரைகளிலும் ஐக்கிய தேச உணவு, கமத்தொழில் தாபனத்தால் அளிக்கப்பட்ட விசேட சின்னமாகிய மூன்று வளரும் கோதுமைக் கதிர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

பு. ப. கு. கலுகல்ல,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1963 ம் ஷூ மார்ச்சு ஸ்ரீ 8 ந் உ.

3—733

---

L.D.—B. 207/41

### சம்பளச் சபைச் சட்டம்

#### 7 ம் பிரிவின்கீழ் அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின் பிரகாரம், தொழில், தேசியமய சேவை அமைச்சர் மைக்கேல் போல் டி சொய்சா சிரிவாதன ஆகிய நான், புகையிலைத் தொழில் சம்பந்தமான கட்டளையொன்றை இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு பிறப்பிக்கவிருக்கும் எனது கருத்தை மேற்கூறிய சட்டத்தின் 7 (1) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறேன்.

பிறப்பிக்கவிருக்கும் கட்டளைக்கு ஆட்சேபனைகள் 1963 ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 6 ந் தேதி பகல் 12 மணிவரையும் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயும் இருத்தல் வேண்டும்.

மை. பே. டி. சொ. சிரிவாதன,
தொழில், தேசியமய சேவை அமைச்சர்.

கொழும்பு,
1963 ம் ஷூ மாச்சு ஸ்ரீ 5 ந் உ.

#### அட்டவணை

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் II ம் பாகத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்குப் பொருந்தும் :—

புகையிலைத் தொழில், அதாவது—

(அ) ஓர் ஏக்கர் இடப்பரப்புக்கு மேற்பட்ட புகையிலைத் தோட்டத்தை உண்டாக்குதல் ;

(ஆ) புகையிலையைப் பதப்படுத்தல் ;

(இ) பதப்படுத்திய புகையிலையை விலைப்படுத்தல்.

பின்வருவனவும் இவற்றிற்குட்படும் :—

(1) மரங்களை வீழ்த்துதலும், அடிக்கட்டைகளைப் பிடுங்குதலும், நிலத்தைத் திருத்துதலும் ;

(2) பயிரிடுதற்கு நிலத்தை உழுதலும், (அடிக் கட்டைகளை) எரித்தலும், கான் வெட்டுதலும், நிலத்தை மட்டஞ் செய்தலும், வரம்பு கட்டுதலும், அடையாளமிடுதலும், நீர் பாய்ச்சுதலும் ;

(3) பாதைகள், பண்டசாலைகள், கொட்டகைகள், அடைப்புகள், வேலிகள் ஆகியவற்றை அமைத்தலும் பழுதுபார்த்தலும், நிருவகித்தலும் ;

(4) நாற்றுப் பாத்திகள் கோலுதல் ;

(5) செயற்கை உரம் அல்லது இயற்கை உரம் அல்லது இவ்விரண்டும் இடுதல் ;

(6) விதைத்தல் ;

(7) நாற்றுப்பாத்திகளுக்கு நிழல் நாட்டுதல் ;

(8) நாற்றுப்பாத்திகளுக்கு நீர் இறைத்தல் ;

(9) நாற்றுகளுக்கு மண் அணைத்தல் ;

(10) பாத்திகளிலிருந்து களை அகற்றல் ;
(11) நெருக்கமான நாற்றுகளை அகற்றுதலும் இடைவெளிகளை நிரப்புதலும் ;
(12) பயிரிடுவோருக்கு நாற்றுகளும் உரமும் மற்றும் பொருள்களும் வழங்குதல் சம்பந்தமான வேலை ;
(13) தோட்டங்களுக்கு நாற்றுகளும் உரமும், மற்றும் பொருள்களும் ஏற்றிச் செல்லல் ;
(14) நாற்று நடுதலும் நாற்றுகளுக்கு நிழல் நாட்டுதலும் ;
(15) நாற்றுகளுக்கும் செடிகளுக்கும் நீர் இறைத்தல் ;
(16) நாற்றுகளுக்கும் செடிகளுக்கும் செயற்கை உரம் அல்லது இயற்கை உரம் அல்லது இவ்விரண்டும் இடுதல் ;
(17) கலந்து பயிரிடலும் களை பிடுங்குதலும் ;
(18) நாற்றுகளிலும் செடிகளிலும் ஏற்படும் பூச்சி, நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான வேலை ;
(19) பழுப்பு இலைகளை ஒடித்தலும் தலைப்பெடுத்தலும் கெட்டெடுத்தலும் ;
(20) புகையிலை வெட்டுதலும் கட்டுதலும் ஏற்றுதலும் ;
(21) பதப்படுத்தல் ;
(22) இறக்குதலும் கட்டாக்குதலும் ;
(23) தரப்படுத்தலும், சிப்பமாக்குதலும், அடைத்தலும், அடையாளமிடுதலும், தொகுத்தலும், சேகரித்தலும் ;
(24) பதப்படுத்திய புகையிலையைப் பொருள்கொள் கூடங்களுக்கு ஏற்றிச் செல்லல் ;
(25) கொள்ளல், தரப்படுத்தல், சரிபார்த்தல், தொகுத்தல், அடைத்தல், சிப்பமாக்குதல், அடையாளமிடுதல், பதப்படுத்திய புகையிலையைப் பொருள்கொள் கூடங்களில் சேகரித்தல் ஆகியன சம்பந்தமான வேலை ;
(26) பதப்படுத்திய புகையிலையைப் பொருள்கொள் கூடங்களிலிருந்து அனுப்புதல் சம்பந்தமான வேலை ;
(27) ஒரு கண்காணியின் வேலை ;
(28) ஒரு காவலாளரின் வேலை ;
(29) புகையிலை வளர்த்தல், பதப்படுத்தல், விலைப்படுத்தல் ஆகியன சம்பந்தமான மற்றும் சகல நடவடிக்கைகளும் செய்கைகளும்.

ஆனால், பின்வரும் வேலையாளரின் வேலை இவற்றிற்குட்படாது :—
(1) லிகிதர், பண்டசாலைப் பொறுப்பாளர், மேற்பார்வையாளர், ஓவசியர்மார், போதனாசிரியர், காசாளர் ;
(2) 1945 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் தேதியன்று வெளிவந்த 9,481 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமான கட்டளையிற் குறிக்கப்பட்டுள்ள மோட்டார்ப் போக்குவரத்துத் தொழில் வேலையாளர் ;
(3) 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ந் தேதியன்று வெளிவந்த 9,224 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமானதும் பின்னர் திருத்தியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்டுள்ள இயந்திரத் தொழில் வேலையாளர் ;
(4) 1949 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ந் தேதியன்று வெளிவந்த 10,054 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமானதும், பின்னர் திருத்தியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்டுள்ள கட்டடத் தொழில் வேலையாளர்.

3—510.

---

L.D.—B, 11/48

### சம்பளச் சபைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 30 ம் பிரிவின் பிரகாரம், கறுவாத் தொழிற் சம்பளச்சபைக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள மேற்படி சபையின் தீர்மானங்களை, அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு, இச் சபை மாற்ற உத்தேசிக்கிறதென்று, மேற்கூறிய சட்டத்தின் 28 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறது.

மேற்கூறிய யோசனைக்கு ஆட்சேபனைகள் 1963 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 1 ந் தேதி பகல் 12 மணிவரைக்கும் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயுமிருத்தல் வேண்டும்.

நெ. லி. அபயவீர,
கறுவாத்தொழிற் சம்பளச்சபைத் தலைவர்.

கொழும்பு,
1963 ம் ஆடு மார்ச்சு மீ 8 ந் வ.

#### அட்டவணை

கறுவாத்தொழிற் சம்பளச்சபையால் ஆக்கப்பட்டு 1961 ம் ஆண்டு யூன் மாதம் 9 ம் தேதி வெளிவந்த 12,460 ம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ம் பாகத்திற்குப்பதிலாக, பின்வரும் புதிய பாகத்தையிட்டு மேலும் மாற்றப்படுகின்றன :

"II ம் பாகம்

துண்டு வேலைக்குக் கீழெல்லைச் சம்பள வீதம்

1. (செடிகளிலிருந்து தடிகள் வெட்டுதல், தடிகள் வெட்டுதலும் தோலுரிசாலைக்கு எடுத்துச் செல்லுதலும், பட்டையின் வெளித்தோலைச் சுரண்டியெடுத்தல், தடிகளின் தோலை உரித்தல், பட்டைகளைச் சுருள்களாக்குதல், சுருள்களை அடுக்குதலும் கட்டாக்குதலும் ஆகியன உட்பட) கறுவா உரித்தலில் ஈடுபடும் வேலையாளருக்குத் துண்டுவேலைக்குரிய கீழெல்லைச் சம்பளவீதம் உரிக்கப்படும் ஒவ்வொரு இறுத்தல் கறுவாவுக்கும் 80 சதமாகும்.

2. கிளைகளை வெட்டுதலில் ஈடுபடும் வேலையாளருக்குத் துண்டுவேலைக்குரிய கீழெல்லைச் சம்பளவீதம் ஒரு ஏக்கருக்கு ரூபா 15.00 ஆகும்.

3. கான்வெட்டுதலில் ஈடுபடும் வேலையாளருக்குத் துண்டுவேலைக்குரிய கீழெல்லைச் சம்பளவீதம் 18 அங்குல ஆழமும், 18 அங்குல அகலமும் கொண்ட காணிக்கு ஒவ்வொரு சங்கிலிக்கும் (22 யாருக்கும்) ரூபா 4.00 ஆகும்.

4. ஆண்டுக் களைபிடுங்குதலில் ஈடுபடும் வேலையாளருக்குத் துண்டு வேலைக்குரிய கீழெல்லைச் சம்பளவீதம் ஒரு ஏக்கருக்கு ரூபா 40.00 ஆகும் "

3—736.

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### ஆயுர்வேத இலாகா

**ஆயுர்வேத சட்டத்தின் 22 (1) பிரிவின் கீழ் ஆயுர்வேதக் கல்லூரிக்கும் ஆரோக்கியசாலைப் பரிபாலனச் சபைக்குமுரிய தெரிவுகளும் வாக்காளரின் அட்டவணையும்**

1961 ம் ஆண்டின் 31 வது இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் 22(1) (எச்) பிரிவின் கீழ் சுதேச வைத்திய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட ; வாக்காளர்ட்கான தகுதியுடைய அதிகாரப் பத்திர முடையவர்கள், 1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ந் திகதியில் 13,399ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியான ஆயுர்வேதச் சட்டத்தின் (அங்கத்தவர் தெரிவு) 3 வது பிரிவைக் கவனிக்கும்படி கோரப்படுகின்றார்கள்.

2. இச்சட்டங்களின் 3 வது பகுதி 1 (பி) பிரிவின் பிரகாரம் தேர்தல் அட்டவணை தயாரிக்கப்பட்டு, கொழும்பு 8, கொட்டா றோட்டிலுள்ள ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியிலிருக்கும் பதிவாளரின் காரியாலயத்தில் வழக்கமான காரியாலய நேரங்களில் 1963 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22 ந் திகதி வரையும் வாக்காளரின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

3. வாக்காளர்களால் ஏதாவது மாற்றங்கள் செய்யப்படுவதற்கான எழுத்து மூலங்கள் 1963 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 27 ந் திகதி பகல் 12 மணிவரையும் கீழ் கைச்சாத்திடப்படுபவரால் அனுமதிக்கப்படும்.

பதிவாளர்,
ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி.

கொழும்பு 8,
1963 ம் ஆடு மார்ச்சு மீ 9 ந் வ.

3—669.

## 1961 ம் ஆண்டின் கம்பனிகள் (பரிசோதகர்) பிரமாணங்களின்கீழ் (7 ஏ பகுதியின் பிரகாரம்) 1962/63 ம் வருட காலத்தில் பதியப்பட்ட பரிசோதகர்களின் நிரல்

### தனியாள் (சாதாரண பத்திரம்)

| | பெயர் | வியாபார விலாசம் |
|---|---|---|
| 1. | அண்ணாமலை, நமசிவாயம் | 181 3/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 |
| 2. | ஆரசகுலரத்ன, பிலிக்ஸ் சிசில் யஸ்ரின் பொனிபேஸ் | 4 ம் தட்டு, கேமாஸ் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு 1 |
| 3. | பரோ, ரேனல்ட் யேம்ஸ் | லொயிட் கட்டிடம், குமார வீதி, கொழும்பு 1 |
| 4. | பொக்ஸ், யூலியன் சிசில் | 135 1/3, டாம்ஸ் வீதி, புறக்கோட்டை, கொழும்பு |
| 5. | குமாரசுவாமி, சரவணமுத்து | 181 3/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 |
| 6. | டீ கொஸ்தா, அன்தோனி மேவின் நொயல் | 18 1/7, ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா கட்டிடம், கொழும்பு 1 |
| 7. | டீ சில்வா, பென்ரோட்டகே ரெபேட் | 370–372, பாங் ஒவ் சிலோன் கட்டிடம், கொழும்பு |
| 8. | டீ சில்வா, செட்றிக் தேவர் | 29 1/8, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 9. | டியன்டாஸ், யோன் | 32, சேர் மொகமட் மாக்கான் மாக்கர் மாவத்த, கொழும்பு 3 |
| 10. | பெனன்டோ, மலவகே ரிசாக்கலால் | ரேக்கன்ட் யங்ஸ் அன் கம்பனி மேற்பார்த்து, த. பெ. 101, கொழும்பு |
| 11. | பெனன்டோ, வீதியகே கொர்நேலிஸ் | 223, பஞ்சிகாவத்தை ரோட், கொழும்பு 10 |
| 12. | பெனன்டோ, மக்கொன்கே டட்லி யுரிஸ் சோமசிறி | 250, ஜீ. ஓ. எச். கட்டிடம், கொழும்பு 1 |
| 13. | கணபதி, வெங்கட்டசுப்பையர் | 173 அன் 175, 2 ம் குறுக்குத்தெரு, கொழும்பு |
| 14. | காட்ராவ், தோமஸ் வில்கின்ஸ்ரன் | ரேக்கன்ட் யங்ஸ் அன் கம்பனி, த. பெ. 101, கொழும்பு |
| 15. | காதி, அப்துல் றகுமான் மொகமட் | 29 2/2, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 16. | குலுகல, உப்பரிசா | 29 2/11, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 17. | ககவித்த, டொன் சொலமன் | 41, கனல் ரோட், கொழும்பு 1 |
| 18. | கணேசலிங்கம், சபாபதிப்பிள்ளை | 265, காலி ரோட், கொழும்பு 3 |
| 19. | கருணலிங்கம், அருளம்பலம் | போட்ஸ் ரேட்ஸ் தோன்ரன் அன் கம்பனி மேற்பார்த்து, கொழும்பு 1 |
| 20. | கேசவன், தாமில் பத்மநாதன் | 78, கொன்சிஸ்ரரி கட்டிடம், மெயின்வீதி, கொழும்பு 11 |
| 21. | லரிவ், அசென்குரேஸ் அப்துல் | 29 2/10, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 22. | மாக்கான் மார்க்கர், அலவி இப்ருகிம் | 32, சேர் மார்க்கான் மாக்கர் மாவத்த, கொழும்பு 3 |
| 23. | மனோகரன், முத்தையா | 43, திருகோணமலை வீதி, கண்டி |
| 24. | முனவீரா, டொன் கென்றி பெறரு | 250, 2 ம் தட்டு, பாங் ஒவ் சிலோன் (ஜீ. ஓ. எச்.) கட்டிடம், கொழும்பு 1 |
| 25. | நாகநாதன், மருதப்பா | குலுகல அன் விக்ரமநாயக்கா, கவூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 26. | நவரத்னம், தர்மன் இராசையா | 32, சர் மொகமட் மாக்கான் மார்க்கர் மாவத்த, கொழும்பு 3 |
| 27. | பணிக்கர், காண்டியூர் நாராயண | 25, சென். செபேஸ்ரியன் மலை, கொழும்பு 12 |
| 28. | பசுபதி, முத்துகுமாரசுவாமி | 54 3/1, அவுஸ்திரேலியா கட்டிடம், கொழும்பு |
| 29. | பெற்ரு, நவகமுவாகே இங்ஸ்லி யோன் இறிசொஸ்ரம் | 4 ம் தட்டு, கேமாஸ் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு 1 |
| 30. | பெறரு, ரெறன்ஸ் எட்வின் | 29 1/11, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 31. | பீறிஸ் கண்டபன்கொடகே ராமோலிஸ் | 29 2/9, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 32. | போப், கென்றி லேய் | அவுஸ்திரேலியா கட்டிடம், கொழும்பு 1 |
| 33. | பூபாலசிங்கம், இராசசிங்கம் | 29 2/9, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 34. | புவிமனசிங்கி, பேடறிக் கையசிந் | 18 1/7, ஸ்ரேற் பாங் கட்டிடம், கொழும்பு |
| 35. | பண்டிதரத்ன, நுகேகொட கபடாகே பபிலிஸ் | போட் ரேட்ஸ் தோன்ரன் அன் கம்பனி, ரைம்ஸ் ஒவ் சிலோன் கட்டிடம், கொழும்பு 1 |
| 36. | இராசதுரை, ஞானப்பிரகாசம் | 81 1/8, நாக கட்டிடம், குமார வீதி, கொழும்பு |
| 37. | இராசரத்தினம், தாமோதரம்பிள்ளை | நாக கட்டிடம், 81 2/5, குமார வீதி, கொழும்பு 11 |
| 38. | இராமையா, சின்னையா | 43, திருகோணமலை வீதி, கண்டி |
| 39. | இராமசாமி, தர்மராசா | நெகிறிஸ் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு |
| 40. | றெங்கண், சிறினிவாச | நெகிறிஸ் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு |
| 41. | ரெட்யர், யோன் | 2 ம் தட்டு, யோக்கட்டிடம், யோக் வீதி, கொழும்பு |
| 42. | சச்சிதானந்தா, குமாரசுவாமி | 54 3/1, அவுஸ்திரேலியா கட்டிடம், கொழும்பு 1 |
| 43. | சம்பந்தர், இராசரத்தினம் திருஞான | 181 3/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 |
| 44. | சமாவீர, டொன் எட்வின் அனேல்ட் செனரத்ன | பி. ஆர். டி சில்வா கம்பனி, இலங்கை வங்கிக் கட்டிடம், கொழும்பு 1 |
| 45. | சதாசிவன், பொன்னுசாமி | 181 3/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 |
| 46. | சவரிமுத்து, சாமுவேல் | நாக கட்டிடம், 81, பிரின்ஸ் வீதி, கொழும்பு 11 |
| 47. | சின்னத்துரை, வல்லிபுரம் | பூரு காதி அன் கம்பனி, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 48. | சுப்பிரமணியம், மகாதேவா | 176, 2 ம் குறுக்குத்தெரு, கொழும்பு 11 |
| 49. | சுவாமிநாதன், கிருஸ்ணமூர்த்தி | நெகிறிஸ் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு 1 |
| 50. | வேலுப்பிள்ளை, சீவரத்தினம் | போட் ரேட்ஸ் தோண்ரன் அன் கம்பனி, த. பெ. 186, கொழும்பு |
| 51. | விஸ்வநாதன், சொக்கலிங்கம் | 78, மெயின் வீதி, கொழும்பு 11 |
| 52. | விஜயதுணவர்த்தன, அந்தோனி யோசப் லோறன்ஸ் | சிசில் அரசகுலரத்ன அன் கம்பனி, கேமாஸ் கட்டிடம், கொழும்பு 1 |
| 53. | விஜயரத்ன, அலஸ்ரர் டால்ரன் எட்வேட் டீ சில்வா | 54 3/1, அவுஸ்திரேலியா கட்டிடம், கொழும்பு |

கொழும்பு,
1963 ம் ஆண்டு மாச்சு மீ 5 ந் வ.,

டபிள்யூ. எம். செல்லையா,
கொம்பனிகள் பதிவாளர்.

3-497/1

## 1961 ம் ஆண்டின் கம்பெனிகள் (பரிசோதகர்) பிரமாணங்களின் கீழ் (7 பி பகுதியின் பிரகாரம்) 1962/63 ம் வருட காலத்தில் பதியப்பட்ட பரிசோதகர்களின் நிரல்

### தொழில் நிலையங்கள் (சாதாரண பத்திரங்கள்)

| | தொழில் நிலையத்தின் பெயர் | பங்காளர்களின் பெயர்கள் | வியாபார விலாசம் |
|---|---|---|---|
| 1. | எ. எ. லரிவ் அன் கொம்பனி .. | அசென்குத்தூஸ் அப்துல் லதீவ் .. | 29 2/10, கப்பூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 2. | ஐயர் அன் கம்பனி .. | சிறினிவாச றெங்கன், தர்மராசா இராமசாமியும் கிருஸ்ணமூர்த்தி சுவாமிநாதனும் | நெகிறிஸ் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு |
| 3. | எ. ஐ. மார்க்கான் மார்க்கர் அன் கம்பனி | அலவி இப்ருகிம் மார்க்கான் மார்க்கர், யோன் டினதாசும் தர்மன் இராசையா நவரத்தினமும் | 32, சேர் மொகமட் மாக்கான் மாக்கர் மாவத்த, கொழும்பு 3 |
| 4. | பீ. ஆர். டீ. சில்வா அன் கம்பனி .. | பெனரோரகே றெபேட் டீ சில்வாவும் டொன் எட்வின் அனோல்ட் செனரத்ன சமரவீரவும் | 2 ம் தட்டு, பாங் ஒவ் சிலோன் கட்டிடம், கொழும்பு 1 |
| 5. | பூரு காதி அன் கம்பனி .. | அப்டுல் றகுமன் மொகமட் காதியும் வல்லிபுரம் சின்னத்துரையும் | 29 2/2, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 6. | காட்டர் டீ கொஸ்தா அன் கம்பனி .. | அந்தோனி மேவின் நோயேல் டீ கொஸ்தாவும் பிறட்றிக் கையசிந் புவிமனசிங்கவும் | 18 1/7, ஸ்ரேற் பாங் கட்டிடம், கொழும்பு 1 |
| 7. | சிசில் அரசகுலரத்ன அன் கம்பனி .. | பிலிக்ஸ் சிசில் யஸ்ரின் பொனிபேஸ் அரசகுல ரத்னவும் நவகமுவாகே ஙிங்ஸ்லி யோன் கிரிசோசரம் பெறருவும் அந்தோனி யோசப் லோறன்ஸ் பெறரு விஜயகுணரத்னவும் | 4 ம் தட்டு, கேமாஸ் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு |
| 8. | டீ. எச். முனவீர அன் கம்பனி .. | டொன் கென்றி முனவீரவும் மக்கொனகே டட்லி யுசீறிஸ் சோமசிறி பர்ணந்தும் | 250, 2 ம் தட்டு, பாங் ஒவ் சிலோன் (ஜீ. ஓ. எச்.) கட்டிடம், கொழும்பு 1 |
| 9. | பொன்செகா அன் கம்பனி .. | எட்வின் பிரான்சிஸ் எமானுவேல் பொன்செகா | 50, யெனறல்ஸ் லேக் ரோட், கொழும்பு 3 |
| 10. | போட் ரேட்ஸ் தோன்ரன் அன் கம்பனி | சீவரத்தினம் வேலுப்பிள்ளை, நுகேகொட கப டாகே பப்ளிஸ் பண்டிதரத்ன, அருளம்பலம் கருணலிங்கமும் ஸ்ரான்லி வில்லியம் பர்சிவலும் | ரைம்ஸ் ஒவ் சிலோன் கட்டிடம், கொழும்பு 1 |
| 11. | எச். ரீ. பீரிஸ் அன் கம்பனி .. | கண்டபன்கொடகே ராஜேலிஸ் பீரிசும் இராச சிங்கமும் பூபாலசிங்கமும் | 29 2/9, கவ்வூர் கட்டிடம் கொழும்பு 1 |
| 12. | குலுகல அன் விக்கிரமநாயக .. | உப்பரிஸ்சா குலுகலவும் மருதப்பா நாகநாத னும் | 29 2/11, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 13. | ஜே. சிசில் போக்ஸ் அன் கம்பனி .. | யூலியன் சிசில் போக்ஸ் .. | 135 1/3, டாம் வீதி, கொழும்பு |
| 14. | யோன் றெட்யா அன் கம்பனி .. | யோன் றெட்யர் .. | 2 ம் தட்டு, யோக் கட்டிடம், கொழும்பு 1 |
| 15. | கேசவன் அன் கம்பனி .. | தாயில் பத்மநாதன் கேசவன் அன் சொக்க லிங்கம் விஸ்வநாதனும் முத்தையா மனோ கரனும் | 78, மெயின் வீதி, கொழும்பு 11 |
| 16. | கணேசலிங்கம் அன் கம்பனி .. | சபாபதிப்பிள்ளை கணேசலிங்கம் .. | 265, காலி ரோட், கொழும்பு 3 |
| 17. | லோறி முத்துகிருஷ்ண அன் கம்பனி .. | ஞானப்பிரகாசம் இராசதுரை .. | 81 1/8, நாக கட்டிடம், குமார வீதி, கொழும்பு 11 |
| 18. | எம். என். சாம்பமூர்த்தி அன் கம்பனி .. | சரவணமுத்து குமாரசுவாமி, இராசரத்தினம் திருஞானசம்பந்தர், நமசிவாயம் அண்ணமலை யும் பொன்னுசாமி சதாசிவமும் | 181 3/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 |
| 19. | ஓ. ரீ. டேவிட் அன் கம்பனி .. | அசென்குடூஸ் அப்துல் லதிவ் .. | 29 2/10, கவ்வூர் கட்டிடம், கொழும்பு |
| 20. | பனிக்கர் அன் கம்பனி .. | கண்டியூர் நாராயண பனிக்கர் .. | 25, சென்ர். செபேஸ்ரியன் மலை, கொழும்பு 12 |
| 21. | போப் அன் கம்பனி .. | கென்றி லோ போப் .. .. | அவுஸ்திரேலியா கட்டிடம், யோக் வீதி, கொழும்பு 1 |
| 22. | பீ. எஸ். சுப்பிரமணிய ஐயர் அன் கம்பனி | மகாதேவா சுப்பிரமணியம் .. | 176, 2 ம் குறுக்குத்தெரு, கொழும்பு 11 |
| 23. | இராமையா அன் கம்பனி .. | சின்னையா இராமையாவும் முத்தையா மனோகர னும் | 43, திருகோணமலை வீதி, கண்டி |
| 24. | சச்சிதானந் சொக்மன் விஜயரத்ன அன் கம்பனி | குமாரசுவாமி சச்சிதானந்த, அலஸ்ரர் டோல்ரன் எட்வேட் டீ சில்வா விஜயரத்னவும் முத்துக் குமாரசுவாமி பசுபதியும் | 54 3/1, அவுஸ்திரேலியா கட்டிடம், கொழும்பு 1 |
| 25. | எஸ். சவரிமுத்து அன் கம்பனி .. | சாமுவேல் சவரிமுத்து .. .. | 81, நாகர் கட்டிடம், பிறின்ஸ் வீதி, கொழும்பு 11 |
| 26. | றெறன்ஸ் பெறரு அன் கம்பனி .. | றெறன்ஸ் பெறரு எட்வின் .. | 29 1/11, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 27. | ரியூடர் வி. பெறரு அன் கம்பனி .. | செட்றிக் றெவர் டி சில்வா .. | 29 1/8, கவ்வூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 28. | ரேக்கண்ட் யங்ஸ் அன் கம்பனி .. | தோமஸ் வில்கின்சன் காட்ஸ் ராவ், ரோனல்ட் யேம்ஸ் பரேு, மலவிகே ரிச்கலால் பிரணன் தோவும் டேவிட் வில்லியம் றெபேட்சனும் | லேயர்ட்ஸ் கட்டிடம், குமார வீதி, கொழும்பு 1 |
| 29. | டபிள்யூ சீ. பிரணன்தோ அன் கம்பனி | விடியகே கொணேலிஸ் பிரணன்தோ .. | 223, பஞ்சிகாவத்த ரோட், கொழும்பு 10 |
| 30. | விஜயரத்ன அன் கம்பனி .. | நிலமண்ட் பிலெல்ஸ் விஜயரத்ன, மைக்கோல் யோன் அல்லசும் யோன் இயுஸ்ரெஸ், ரன்ஸ் ரன் மார்ட்டினும் அரசன்கே லுயி பெஞ்சமின் பிரிரோ முத்துநாயகமும் | 70 1/1, சதாம் வீதி, கொழும்பு 1 |

டபிள்யூ. எம். செல்லையா,
கம்பனிகளின் பதிவாளர்.

கொழும்பு,
1963 ம் ஆண்டு மாச்சு மாதம் 5 ந் திகதி.

3–497/2

## பிரகடனம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தீவுப்பிரிவில் லைடன் தீவுப்பிரிவிலுள்ள கால்நடைகளிடையே, கால்வாய் நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டத்தின் " கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினுலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட் பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருக வைத்தியரான அபேரத்தின பண்டாரநாயக ஆகிய யான், கடலால் சூழப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய லைடன் தீவுப் பிராந்தியத்தை ஒரு " தொற்றுநோய்ப் பிரதேசம் " என்று பிரகடனப்படுத்துகின்றேன்.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும் வரை இப்பகுதியிலிருந்தும், இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டு வண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின் கீழ் பிரகடனம் செய்கின்றேன்.

" தொற்று நோய் " பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப் பிரகாரம் கையாள வேண்டிய செயற்பாடுகளை எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்று நோய் (விலங்குகள்) பிரமாணங்களை, கால்நடை உரிமையாளரும் மாட்டு வண்டிகள் உரிமையாளரும் தமது அவதானத்திற்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களை யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள மிருக வைத்தியரிடமிருந்தும் (ஊர்காவற்றுறை) தீவுப்பகுதி காரியாதிகாரியின் கௌரியில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

ஈண்டு பொறிக்கப்பட்ட தேதி முதல் இப்பிரகடனம் செயல் முறைக்கு வந்துள்ளது.

அபேரத்ன பண்டாரநாயக்,
அரச பிரதம மிருக வைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் களரி,
(விலங்குற்பத்தி–சௌக்கியம்),
கமத்தொழிற்றுறை,
பேராதனை,
1963 ம் ௵ மார்ச் ௴ 7 ந் ௳.

3—527

## பிரகடனம்

கீழ் மாகாணம் உஹன மாவட்டத்திலுள்ள வேவகம் பத்து பிரிவிலுள்ள கால்நடைகளிடையே கால்வாய் நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத்திருத்தச் சட்டத்தின் " கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினுலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உபஉட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருகவைத்தியரான அபேரத்தின பண்டாரநாயக ஆகிய யான், கீழ்க் குறித்த எல்லைகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு " தொற்றுநோய்ப் பிரதேசம் " என்று பிரகடனப்படுத்துகின்றேன்.

வடக்கு : மட்டக்களப்பு மாவட்ட எல்லை ;
தெற்கு : கல்ஓயா அபிவிருத்திச் சபையின்கீழ் உள்ள பிரிவின் எல்லை;
கிழக்கு : கல்முனை, அக்கரைப்பத்து காரியாதிகாரிகளின் பிரிவுகளின் எல்லைகள் ;
மேற்கு : விந்தனபத்து மொனருகல மாவட்ட எல்லைகள்.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும் வரை இப்பகுதியிலிருந்தும், இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டுவண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின் கீழ் பிரகடனம் செய்கின்றேன்.

" தொற்றுநோய் " பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாளவேண்டிய செயற்பாடுகளை எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்று நோய் (விலங்குகள்) பிரமாணங்களை, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தமது அவதானத்திற்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களை உஹன பகுதியின் உள்ள மிருக வைத்தியரிடமிருந்தும் வேவகம் பத்து பகுதி காரியாதிகாரியின் களரியில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

ஈண்டு பொறிக்கப்பட்ட தேதி முதல் இப்பிரகடனம் செயல் முறைக்கு வந்துள்ளது.

அபேரத்ன பண்டாரநாயக,
அரச பிரதம மிருகவைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் களரி,
(விலங்குற்பத்தி–சௌக்கியம்),
கமத்தொழிற்றுறை,
பேராதனை,
1963 ம் ௵ மார்ச்சு ௴ 8 ந் ௳.

3—694

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக் திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாளைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.